சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 139/2023

**PW 1 குணசேகரன்** **08.08.2025**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் காவல் துறையில் சார்பதிவாளராக இருந்து கடந்த மே மாதம் தான் பணி ஓய்வு பெற்றேன். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் எனது பெயர் இல்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் Sunny வாகனத்தின் பதிவெண் தவறாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்தது எப்போது நடைபெற்றது என கேட்டால் 05.01.2023 அன்று நடந்தது, விபத்தை பொருத்து எப்போது புகார் கொடுக்கப்பட்டது என கேட்டால் விபத்தின் காரணமாக நான் சுயநினைவு இல்லாமல் இருந்தேன் போலிசார் எனது மனைவியிடம் அவர் மருத்துவமனையில் இருந்த போது புகார் வாக்குமூலம் பெற்றனர் அது எப்போது எனக்கு ஞாபகமில்லை என்ன புகார் கொடுக்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது தற்போது புகாரில் கண்ட விவரம் தெரியுமா என்றால் கேட்டு தெரிந்து கொண்டேன். எப்போது புகாரை பற்றி கேட்டு தெிந்து கொண்டேன் என கேட்டால் விபத்திற்கு பின்னிட்டு 2 வாரம் கழித்து கேட்டு தெரிந்துகொண்டேன். புகார் யார் மீது கொடுக்கப்பட்டது என கேட்டால் sunny காரின் ஓட்டுனர் மீது புகார் கொடுக்கப்பட்டது. அவர் பெயர் எனக்கு தெரியாது. மேற்கண்ட விவரத்தை முதல் விசாரணையில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனத்தில் பொள்ளாச்சியிலிருந்து கோவை நோக்கி வட திசையில் செல்லும் போது கள்ளாங்காட்டு புதூர் அருகில் எனது வாகனம் பெட்ரோல் இல்லாமல் நின்றுவிட்டதா என கேட்டால் எனது வாகனம் நின்று விட்டது. நான் விபத்து

சமயத்தில் வலதுபுறம் உள்ள பெட்ரோல் பங்கிற்கு இறங்காமல் கால்களால் வாகனத்தை வலதுபுறம் கொண்டு சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியவாறு குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது என கூறியது தவறு என்று சொன்னால் அது பொருத்து எனக்கு தெரியாது. விபத்திற்கு நான் தான் காரணம் என்று இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அவர்களாகவே வழக்கை RCS செய்துவிட்டார்கள். என்னிடம் போலிசார் விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் இறுதி அறிக்கை தான் இந்த வழக்கில் கண்ட இறுதி அறிக்கை என்றால் சரிதான், அது **எமசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றதத்ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் பிழை உள்ளதாக சொல்லி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என சொன்னால் சரிதான், ஆனால் என்னிடம் விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் அறிவிப்பானது 29.02.2024 அன்று சார்வு செய்யப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் எனக்கு சார்வு செய்யப்படவில்லை. மேலும் Charge Sheet ஆனது Mistake of fact என்ற காரணத்திற்க்காக முடிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் ஓட்டிச் சென்ற வாகனமானது யாருடையது என்று கேட்டால் நான் பிரபு என்பவரிடமிருந்து இருசக்கர வாகனம் வாங்கினேன், ஆனால் பெயர் மாற்றம் செய்யப்படவில்லை. பிரபுவின் ஊர், விலாசம் தெரியுமா என்றால் மாதம்பட்டியை சேர்ந்தவர். நான் ஓட்டி சென்ற வாகனத்தின் பதிவு சான்று அவர் பெயரில் இல்லை என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் கருப்புசாமி என்பவரின் பேரில் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். விபத்திற்கு எத்தனை நாட்களுக்கு முன்பாக இருசக்கர வாகனத்தை வாங்கினேன் என கேட்டால் சுமார் 6 மாதத்திற்கு முன் இருக்கலாம். என்னவிலைக்கு வாங்கினேன் என கேட்டால்

ரூ.20,000/-க்கு வாங்கினேன். விபத்து சமயத்தில் நான் ஓட்டி சென்ற வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்று சொன்னால் சரிதான். பிரபு கருப்புச்சாமியிடமிருந்து வாகனத்தை எப்போது வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் காவல் துறை அதிகாரியாக இருக்கும் நிலையில் ஒரு இருசக்கர வாகனத்தை பெயர் மாற்றம் செய்யாமல் காப்பீடு எடுக்காமல் அந்த வாகனத்தை ஓட்டி சென்றது மோட்டார் வாகன விதிமீறல் என்றால் சரிதான் ஆனால் அலுவலக பணியின் காரணமாக மாற்றவில்லை. நான் சொல்வது தவறு என்று சொன்னால் அது சரியல்ல. நான் விபத்து சமயத்தில் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. நான் வாகனத்தை பிரபுவிடமிருந்து ரூ.20,00/-க்கு வாங்கினேன் என்று விவரத்தை முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். வாகனத்திற்கு காப்பீடு இல்லை, அந்த வாகனம் கருப்புசாமியின் பெயரில் உள்ளது என சொன்னால் சரிதான். மேற்கண்ட விவரத்தை முதல் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு விபத்து சமயத்தில் தலையில் காயம் ஏற்பட்டதா என்றால் காயம் ஏற்பட்டது. நான் தலைகவசம் அணிந்திருந்தால் தலையில் அடிபட்டிருக்காது என சொன்னால் அது சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பில்கள் மற்றும் டிஸ்ஜார்ஜ் சம்மரி Duplicate என்று சொன்னால் அது சரியல்ல. நான் ஒரிஜினல் மருத்துவ பில்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் விபத்தின் காரணமாக செலவான தொகையை நான் பெற்றுவிட்டேன் என சொன்னால் எங்கள் துறை மூலம் சிறிது இழப்பீடு பெற்றேன், அதற்கு நான் அசல் மருத்துவ பில்களை கொடுத்துவிட்டேன். நான் விபத்தை பொருத்து முழு தொகையும் பெற்றுவிட்டேன் என சொன்னால் சரியல்ல. நான் விபத்தை பொருத்து இழப்பீடை என் துறை மூலம் பெற்றுவிட்டு இந்த வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. எனக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதை

பொருத்து ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். விடுப்பு இழப்பை பொருத்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். காவல்துறை புலன் விசாரணையில் விபத்திற்கு நான் தான் காரணம் என்று கூறியுள்ள நிலையில் 3ம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்ட ஈடும் தர இயலாது என்று சொன்னால் அது சரியல்ல. 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த மனு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி